Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.6/2012

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : நரேந்திரநாத் ஜென்னா | Father/Husband Name | : பிரபுல்லாகுமார் ஜென்னா |
| Calling | : | Age | : |
| Date | : 30.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30rd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை, மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அவசர சிகிச்சை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.12.2010–ம் தேதி நான் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 9.00 மணிக்கு ராதாகிருஷ்ணன் என்பவரை மலைகுழந்தன் என்பவர் அழைத்து வந்தார். அவர் சுயநினைவுடன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். சிகிச்சையின்போது அவர் என்னிடம் தன்னை அடையாளம் தெரியாத நபர்கள் தன்னை இரும்பு கம்பியால் இடது தோள்பட்டை, இடது கையிலும் தாக்கியதாகவும், அதனால் அவருக்கு அங்கு வலி இருந்ததாகவும் என்னிடம் சொன்னார். அவருக்கு தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக காயம்பட்டவர் என்னிடம் சொன்னாரா என்றால் CASMABMM கல்லூரிக்கு அருகே நடந்ததாக சொன்னார். வெளிப்படையான காயங்கள் இருந்ததா என்றால் ஆம், சாதாரண சிராய்ப்பு காயங்கள் இருந்தது. ஏதேனும் கம்பியில் அடித்ததற்கான தடங்கள் இருந்தன என்றால் இல்லை. காயம்பட்டவர் வெளிநோயாளியாக தான் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. தானாக தடுமாறி கீழே விழுந்தால் கூட இது போன்ற சிராய்ப்பு காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். ஒரு கம்பியால் முரட்டுத்தனமாக தாக்கினால் எலும்புகள் சேதமடைய வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.